# புறநானூற்றில் புனைகதைக் கூறுகள்

# Elements of Fiction in Purananuru

***ப. ஷைனி***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முஸ்லிம் கலைக்கல்லூரி
கன்னியாகுமரி, இந்தியா
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, இந்தியா

**P. Shyni**
*Full-Time Ph.D. Research Scholar*
*Muslim Arts College*
*Kanyakumari, India*
*Manonmaniam Sundaranar University*
*Tirunelveli, India*

***முனைவர் த. மினி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக்கல்லூரி
கன்னியாகுமரி, இந்தியா
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, இந்தியா

**Dr. T. Mini**
*Assistant Professor, Department of Tamil*
*Muslim Arts College, Thiruvithancode*
*Kanyakumari, India*
*Manonmaniam Sundaranar University*
*Tirunelveli, India*

## ஆய்வுச் சுருக்கம்

*புறநானூறு தமிழர்களின் பண்பாட்டுக் களஞ்சியம். பெரும்பாலான புறநானூற்றுப் பாடல்கள் வாழ்வியல் செய்திகளை கதை வடிவமாக நமக்கு தருகின்றன. கதை வடிவிலான பாடல்களில் வாழ்வின் பண்பாட்டு அம்சங்கள் கட்டியெழுப்பப்படுவதை நாம் கவனத்தில் கொள்ளலாம். அதனை மிக நுட்பமாக இந்த கட்டுரை பேசுகிறது.*

***திறவுச்சொற்கள்:***

*புறநானூறு, புனை கதை, பண்பாட்டுக் களஞ்சியம், ஊர் திருவிழா*

## Abstract

*Purananooru is a cultural encyclopedia of Tamils. Most of the Purananooru songs give us life messages in the form of stories. We can note that the cultural aspects of life are built up in the songs in the form of stories. This article talks about it in a very subtle way.*

***Keywords:***

*Purananooru, Fiction, Encyclopedia of Culture, Town Festival*

**Citation**

Shyni, P. and T. Mini, "Elements of Fiction in Purananuru." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 29–35.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095177*

**ஊர் திருவிழாவும் தளபதியும்**

*நகரம் விழாவின் ஆரவாரமும் கோலாகலமும் நிறைந்து காணப்பட்டது. மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் இருந்தார்கள். இடைவிடாமல் மழை பெய்து கொண்டிருந்தது. மழையில் நனைந்து கொண்டு மக்கள் திருவிழா காண வந்து கொண்டிருந்தார்கள். அந்த திருவிழாக் கூட்டத்திற்கு இடையே அந்த நாட்டின் தளபதியும் நின்றதை கவனிக்க முடிந்தது. வீட்டில் அவன் மனைவி நிறைமாத கர்ப்பமாக இருந்தாள். ஆகையினால், அவனை மட்டும் திருவிழா பார்த்துவர அவள் அனுப்பியிருந்தாள். அது மட்டுமில்லாமல் அவள் வற்புறுத்திக் கொண்டதால் மட்டுமே அவன் திருவிழா காண வந்தான். இருந்தாலும் மனதில் அவள் நினைப்புதான் அவனுக்கு இருந்தது. இந்த நேரத்தில் தான் காதுகள் அதிரும்படி முரசொலி எழுந்தது. அவன் திடுக்கிட்டான். அது போர் அறிவிப்பின் முரசொலி. யாரோ ஓர் அரசன் திருவிழா சமயத்தை பயன்படுத்திக் கொண்டு அந்த நகரத்தின் மீது தன் படைகளோடு முற்றுகையிட வந்திருந்தான்.*

*இவன் அரண்மனையின் முக்கியமான தளபதி. உடனே அரண்மனைக்கு விரைந்தான். போருக்கு வந்த பகைவனுக்கு அறிவு புகட்ட அரண்மனை சென்று போர்க்களம் புகுவதா? அதே சூழ்நிலையில் மனைவிக்கு பிரசவம் ஆகிவிட்ட செய்தியை எதிரே வந்தவன் தெரிவித்தான். காதல் மனையாளை மகப்பேறுற்ற நிலையில் காண வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் பிறந்து வளர்ந்த தாய்நாட்டைக் காப்பதற்கு கிளம்ப வேண்டிய கடமை என்ற பொறுப்பு வேறு அவன் கடமையை வற்புறுத்தியது. இரண்டு முனைகளும் கூர்மையான ஓர் ஊசியின் முனைகளைப் போல; பற்றுவது எதை என்ற சிந்தனை அவனுள் எழுந்தது. கட்டில் கட்டுகின்றவன் கையிலுள்ள ஊசியில் துணி போல விரைந்தது அவன் மனம். ஊசிமுனை பாயும் வேகத்தில் கடமையின் பக்கம் தாவிப் பாய்ந்தது, அவன் மனம். என் மனைவியை விடப் பெரியது நாட்டின் உரிமை. அதைக் காப்பது என் உயிரினும் சிறந்த கடமை என்றெண்ணிக் கொண்டே அரண்மனை நோக்கி ஓடினான் அவன்.*

***"சாறுதலைக் கொண்டெென, பெண்ஈற்று உற்றென***
***ஊசியின் விரைந்தன்று மாதோ -***
***ஊர்கொள வந்த பொருநனொடு,***
***ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே!"*** ***(புறம். 82)***

**பேகனிடம் பரணர் கேட்ட பரிசு**

*புலவர் பரணருக்கு அந்த செய்தியை கேள்விப்பட்டபோது, நம்பவே முடியவில்லை. கேட்பவர்கள் தலைகுனியத்தக்க காரியத்தை பேகன் செய்துவிட்டார். என்ன செய்வதென்று அறியாது திகைத்தார், பரணர். அழகிலும் கற்பிலும் சிறந்தவளாகிய தன் மனைவி கண்ணகியை மறந்துவிட்டு, முல்லைவேலி நல்லூரில் வாழ்கின்ற அழகியின் வீட்டில் வள்ளல் பேகன் தங்கிய செய்தி பரணருக்கு கிடைத்தது.*

*ஒரு பெண்ணுக்கு மனைவியின் இடத்தைக் கொடுத்து விடுவதா கொடை? பேகன் ஒழுக்கம் என்ற உயரிய இடத்திலிருந்து வழுக்கி கீழே விழுந்துவிட்டான். கண்ணகி நடமாடும் துயரமாகி அந்த அரண்மனையே கதியாகி இருந்து வாழ்ந்தாள்.*

*ஆனால் பரணருக்கு, பேகனை அவன் மனைவிக்கு மட்டும் மீட்டுத் தர முடியுமானால் அதுவே தம் வாழ்நாளில் செய்த தலைசிறந்த நற்செயலாக இருக்கும் என்ற உறுதி மாத்திரம் மனதில் ஏற்பட்டது. உடனே பரணர் முல்லை வேலிநல்லூருக்கு புறப்பட்டார். ஆடல் பாடல்கள் சிறந்த அழகிகள் வசிக்கும் ஊர் அது. அந்த பெண்கள் சிரித்தால் முல்லை உதிர்ந்தது.*

*சிங்காரித்தாலோ கூந்தலில் முல்லை மலர்ந்தது. ஆண் பிள்ளையாக பிறந்தவர்கள் எத்தனை திடசித்தன் உடையவனாக இருந்தாலும் கவரக்கூடிய அழகிகள் அவர்கள். பேகன் தங்கி இருக்கக்கூடிய வீட்டைக் கண்டுபிடித்து பரணர் சென்றுவிட்டார். முதலில் ஒரு பெண்ணின் தலை உள்ளிருந்து தெரிந்தது. அந்த அழகியின் முகம் போதையூட்டுகின்ற கவர்ச்சி. பரணரே, ஒரு கணம் தம் நிலை மறந்தார்.*

*வீட்டு வாசலில் போற்றி வணங்கத்தக்க புலவர் வந்து நின்று கொண்டிருப்பதை கண்ட பேகன் அந்த நிலையில் ''திருடனுக்கு தேள் கொட்டினார் போல் விழித்தான்''.*

*நான் இப்போது என் கண்களுக்கு முன் யாரைக் காண்கிறேன்? கடையெழு வள்ளல்களில் ஒருவரும் ஒழுக்கம் மிகுந்தவனுமாகிய பேகனா, கணவனாக நிற்பது? இந்த பரணருடைய சொற்கள் பேகன் மனதில் தைத்தன. இப்படியான பல வார்த்தைகளைக் கேட்ட பேகன், பரணரே! போதும் என்னை வார்த்தைகளால் கொல்லாதீர்கள். வேண்டியதை கேட்டு வாங்கிக் கொண்டு போகலாம். ஆத்திரத்தில் கூறினான்.*

*சரி! நான் எனக்கு வேண்டிய பரிசிலை கேட்கட்டுமா? நன்றாகக் கேளும். மறுக்காமல் தருகிறேன். இதோ என் விருப்பத்தை கேட்கிறேன். எனக்கு நீதான் வேண்டும். பேகனுக்கு மாபெரும் அதிர்ச்சி. வாதிட்டு வெற்றி பெற முடியாமல் எங்கே புறப்பட வேண்டும் என பேகன் தயக்கத்துடன் கேட்டான். அப்போது நீ எனக்கு சொந்தம். நான் கூப்பிடுகிறேன் வா. தயங்குவதற்குக் கூட உனக்கு உரிமையில்லை என்றார், பரணர்.*

*இருவரும் தேரில் ஏறி அரண்மனைக்கு வந்தார்கள். பேகா! எனக்கு சொந்தமான உன்னை நான் கண்ணகியாகிய உன் மனைவிக்கு கொடுத்திருக்கிறேன். இனிமேல் நீ இந்த கண்ணகி ஒருத்திக்கு தான் உரியவன். உடல் மட்டுமில்லை, உன் உள்ளமும் இவளுக்கே உரிமை! பேகன் தலைகுனிந்து நின்றான். புலவர் இருவரையும் வாழ்த்திவிட்டு சென்றதாக கதைத் தன்மையை சுமந்தபடி வருகின்ற புறநானூற்று பாடல் தான் இது.*

***''கடாஅ யானைக் கலிமான் பேக!***
***பசித்தும் வாரேம்,***
***இஃதுயாம் இரந்த பரிசில்; அஃது இருளின்,***
***இனமணி நெடுந்தேர் ஏறி,***
***இன்னாது, உறைவி அரும்படர் களைமே!''*** *(புறம்.145)*

**நட்பே வியந்த நட்புக் கதை**

*சோழ நாட்டு உறையூர் வளமிக்க காவிரியாற்றின் கரை. கோப்பெருஞ்சோழன் எளிய உடையுடன் வடக்கு நோக்கி வீற்றிருந்தான். நேற்று வரையிலான அரச வாழ்வு இன்புற்ற மன்னர் மணல்மேல் தருப்பைப் புற்கள் பரப்ப அமர்ந்தபடி புலவர் பொத்தியாரைப் பார்த்து, நீர் ஓர் ஏற்பாடு செய்யும். என் உயிர் நண்பர் பிசிராந்தையார் நான் வடக்கிருப்பதை கேள்விப்பட்டு தாமும் வடக்கிருந்து உயிர் நீப்பதற்காக இங்கே வருவார். இங்கே எனக்கருகே வடக்கிருப்பதற்காக ஓர் இடத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்.*

*பாண்டிய நாட்டில் எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஒரு சிற்றூரில் வசிக்கும் பிசிராந்தையார் சோழ நாட்டுக்கு வந்து உயிர் கொடுக்க வாய்ப்பில்லை என அனைவரும் சொல்லிக் கொண்டார்கள். சான்றோர்கள் உறுதியாக நம்பினார்கள்.*

*ஒன்று, இரண்டு, மூன்று நாழிகைகள் கழிந்து கொண்டிருந்தன. புலவர்கள் எல்லோரும், பொத்தியார் உட்பட அங்கிருந்து அனைவரும் கிளம்பினர். ஆனால் சுடுகின்ற ஆற்று மணலையும் பொருட்படுத்தாமல் யாரோ ஒருவர் எதிரில் வேகமாக நடந்து வந்து*

*கொண்டிருந்தார். பொத்தியாரைக் கண்ட பிசிராந்தையார் ஐயா, இங்கே காவிரிக் கரையில் கோப்பெருஞ்சோழன் வடக்கு நோக்கி "உண்ணா நோன்பு" இருப்பது எந்த இடம்? எனத் தெரிந்தால் சொல்லுங்கள். நான் பாண்டிய நாட்டை சார்ந்த பிசிராந்தையார் எனக் கூறியவுடன் நட்பு என்ற வார்த்தைக்கு புதிய அத்தியாயம் எழுதப்பட்டது. காவிரிக் கரையில் இரண்டு உயிர்கள் ஒன்றாயின. ஒன்றாகிய ஈருயிர்களும் இந்த உலகிற்கு புதிய உண்மையை எழுதிச் சென்றன.*

***"நினைக்கும் காலை மருட்கை உடைத்தே,***
***எனைப்பெருஞ் சிறப்பினோடு ஈங்குஇது துணிதல்;***

***...............................................................***

***"வருவன்" என்ற கோனது பெருமையும்,***
***அதுபழுது இன்றி வந்தவன் அறிவும்,***
***வியத்தொறும் வியத்தொறும் வியப்புஇறந் தன்றே" (புறம். 217)***

**எளிமையும் வலிமையும்**

*ஒரு மாலை நேரம் ஔவையாரும் அதியமானும் மருத மரத்தின் நிழலில் அமர்ந்து கொண்டு இருந்தார்கள். பட்டத்து யானையைப் பாகர்கள் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்கள். ஊர் சிறுவர்கள் யானையைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு சிறிய கருங்கல் மலை கிடப்பதைப் போல யானை நீரில் கிடந்தது. அதியமானும் ஔவையாரும் பேசுவதை சிறிது நேரம் நிறுத்திவிட்டு, நீர்த்துறையை நோக்கி பார்வையை விட்டார்கள்.*

*யானைப் பாகன்கள் சிறுவர்களை அழைத்து யானையின் கொம்புகளை, அதாவது நீண்ட பருமனான தந்தங்களை தேய்த்து கழுவச் சொன்னார்கள். முதலில் பயப்பட்டனர் சிறுவர்கள். பின்னர் ஒரு சிறுவன் மத்தகத்தின் மேல் பிடரியில் உட்கார்ந்து கொண்டு அடிக்கொம்பை குனிந்து தேய்த்தான். இன்னொருவன் கொம்பின் அடிநுனியை கழுவுவதற்காக யானையின் கடை வாய்க்குள் தன் சிறுகையை நுழைத்தான். மற்றொருவன் துதிக்கையின் மேல் தனது பாகத்தை ஓங்கி மிதித்துக் கொண்டு கொம்பைத் தேய்த்தான். கால் மேல் ஏறி நின்று கொண்டு வேலை செய்தான், இன்னொருவன். அது யானை, பயப்படத்தக்கது என்ற எண்ணம் அந்த பிள்ளைகளிடம் இல்லை. அவ்வளவுக்கு இடமளித்து அமைதியாக நீரில் கிடந்தது யானை. ஔவையார் அதியமானை நோக்கி "அதியா பார்த்தாயா? வேடிக்கையை". உரிமை பெருக பெருக பயம் குறைந்து நம்பிக்கை வளர்கிற விதத்தை இது காட்டுகிறது எனக் கூறினார்.*

*சற்று முன் பாகன் அழைத்த போது பயந்த சிறுவர்கள் யாருமில்லை, இதே சிறுவர்கள் தான். பிறகு இரவு நேரம் வந்ததால் ஔவையும் அதியமானும் அரண்மனைக்குக் கிளம்பினர்.*

*ஒரு நாள் அரண்மனைக் காவலன் பதறியபடி வந்து, அரசே! பட்டத்து யானைக்கு மதம் பிடித்துவிட்டது. பாகர்களுக்கு அடங்காமல் தெருவில் பாய்ந்து தறிகெட்டு ஓடுகிறது என்று அதியமானிடம் கூறியவுடன் எல்லா பாகர்களையும் ஒன்று கூடி முயற்சி செய்து யானையை அடக்க மன்னர் கட்டளையிட்டார். அப்போது அவைக்கு வந்த ஔவை அன்று ஏரியில் சிறு பிள்ளைகள் கொம்புகளைக் கழுவும் போது சாதுவாகத் தண்ணீரில் கிடந்த இந்த யானையின் மதம் இன்று எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது பார்த்தாயா? எனக் கேட்டார்.*

*உடனே பயங்கரம் மட்டுமா? எத்தனை உயிர்களுக்கு சேதம் விளைத்தனவோ? எனக் கூறியவுடன் ஔவை பேசிய பேச்சு முக்கியத்துவம் வாய்ந்தது. அதியா! நீயும் இப்படி ஒரு மத யானையைப் போன்றவன் தான். நீ புலவர்களாகிய எங்கள் அன்புக்கு மட்டும் கட்டுப்படுகின்றாய். உன் பகைவர்களுக்கு முன்னால் இதோ மதம் பிடித்து ஓடும் இந்த யானை*

*மாதிரி ஆகி விடுவாய். புதிராகத் தொடங்கிய பேச்சு புகழ்ச்சியாக மாறினாலும் அதியமான் நாணத்தோடு தலை குனிந்தான். எளிமையும் வலிமையும் கலந்த இந்த காட்சிச் சித்திரம் மிக அற்புதமான கதை சொல்லல் தன்மையோடு காட்சிப்படுத்தப்படுவதை புறநானூற்றில் வருகின்ற இந்தப் பாடலில் நாம் பார்க்கலாம்.*

***"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்,***
***நீர்த்துறை படியும் பெருங்களிறு ..***
***இன்னாய், பெரும!நின் ஒன்னா தோர்க்கே"*** ***(புறம். 94)***

**பெற்றவள் பெருமைப்படும் காட்சிச் சித்திரம்**

*போர் முடிந்து போர்க்களம் வெறிச்சோடி கிடக்கின்ற நிலை, இறந்தவர் தவிர இருந்தவர்கள் நாடு திரும்பினர். கொக்கின் இறகு போல் நரைத்து வெளுத்த கூந்தல், பசிய நரம்புகள் புடைத்து தசை சுருக்கமடைந்து எலும்புகள் தெரியும் தோள்கள், வற்றி வறண்ட குழிகள் விழுந்த முகம். போர்க்களத்திலிருந்து வந்து கொண்டிருந்த வீரர்களின் கூட்டத்தில் ஒளி குன்றிய அந்த வயதான முதாட்டி யாரையோ தேடிக் கொண்டிருந்தார். பலரிடமும் போர்க்களம் சென்ற தனது மகனைக் குறித்து விசாரித்தார். யாரும் பதில் சொல்லாமல் நகர்ந்தனர். கடைசியில் உன் மகன் இப்போது உலகத்திலேயே இல்லை. போரில் பகைவர்களுக்கு புறமுதுகு காட்டி ஓடி முதுகில் அம்பு பாய்ந்து இறந்து போய்விட்டான் என ஒருவன் கூறியவுடன், முதுகில் புண்பட்டு இறந்ததாகக் காதில் விழுந்தவுடன், என் மகன் முதுகில் புண்பட்டு இறந்திருப்பானாயின் அவனுக்கு பால் கொடுத்த இந்த மார்பை அறுத்தாவது அவனுக்கு பாலூட்டிய களங்கத்தை போக்கிக் கொள்வேன். இதோ போர்க்களத்திற்கு புறப்படுகிறேன் என சபதம் இட்டபடியே புறப்பட்டாள். போர்க்களத்தில் ஒரே பிணங்களின் குவியல். தனிமை, இருள் இவைகள் எல்லாம் பயத்தை உருவாக்கவில்லை. கடைசியில் மகனின் சடலத்தை கண்டுபிடித்தாள். முதுகில் கடுகளவு இரத்தக்காயம் கூட இல்லாமல் மார்பில் புண்பட்டு இறந்திருப்பதைக் கண்டாள். பத்து மாதம் சுமந்து அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சி இந்த தருணத்தில் சாதாரணமானது. இப்போது அடைந்த பெருமை என்பது ஈடு இணையற்ற ஒரு வீரத்தாயின் பெருமை.*

***"நரம்புஎழுந்து உலறிய நிரம்பா மென்தோள்,***
***முளரி மருங்கின், முதியோள் சிறுவன்,***
***.. உண்டஎன்***
***முலைஅறுத் திடுவென், யான்"***
***படுமகன் கிடக்கை காணூஉ,***
***ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே!*** ***(புறம். 278)***

**உண்மை நட்பு பற்றிய உரையாடல் பதிவு**

*சோழன் நல்லுருத்திரன் கேள்வி ஒன்று நண்பர்கள் பற்றிய ஓர் உரையாடலை நமக்குள் நடத்துகிறது.*

*ஒரு பெரிய வயல். முதிர்ந்து தலைசாய்த்த நெற்கதிர்கள். இடையே ஓர் எலி, வயலில் உள்ள நெற்கதிர்களை அறுத்து தன் வாயினால் துண்டிக்கிறது. பொந்தில் ஒவ்வொரு கதிர்களையும் கொண்டு போய் வைத்துவிட்டு வருகிறது. தான் திருடிய பொருட்களைத் தானும் உண்ணாமல் பிறருக்கும் கொடுக்காமல் அழகிய நெற்கதிர்களை பாழாக்கிவிடுகின்றது. இதுதான், எலியின் வாழ்வு. திருட்டுத்தனத்தோடு கூடிய அர்த்தமில்லா அர்ப்ப வாழ்வு.*

*மனிதர்களிலும் இப்படிப்பட்ட எலிகள் இருக்கிறார்கள். பிறரை ஏமாற்றி தன்னையும் ஏமாற்றிக் கொள்கின்ற மனித எலிகள் அதிகம்.*

*இதற்கு நேர்முரணான கதை புலியின் கதை. அந்த புதருக்கு அருகில் கருமையான சிறு குன்று உள்ளது. ஒரு யானை அங்கே புதருக்கு அருகில் மேய்ந்து கொண்டிருக்கிறது. யானை மிரண்டோட அடியெடுத்து வைப்பதற்குள் புதருக்குள்ளிருந்து பெரிய வேங்கைப்புலி ஒன்று அதன் மத்தகத்தில் வேகமாக மோதிப் பாய்கிறது. யானையின் குரூரமான பிளிறலும் பசிமிக்க வேங்கையின் போர் முழக்கமும் காட்டை கிடுகிடுக்கச் செய்கின்றன. யானை புலியைத் தாக்க, புலி யானையைத் தாக்க, ஒரே இரத்தக் களரியாயிற்று. புலிக்கு வலிமை அதிகம். போதாக் குறைக்கு அப்போது அதற்கு பசி நேரம் வேறு. யானையின் ஆற்றல் அதன்முன் எடுபடவில்லை. மத்தகத்தைப் பிளந்து தன் வெறிக்கு யானையின் உயிரை இரையாக்கிக் கொள்ளத் துடித்தது புலி. யானை கடைசியில் வேரற்ற மரம் போல இடதுபக்கம் விழுந்தது.*

*புலிக்கு நன்றாகப் பசி இருந்தும் யானையைச் சாப்பிடவில்லை. யானை தன் இடப்பக்கம் விழுந்துள்ளது. அதனால், சாப்பிடக் கூடாது எனப் போய்விட்டது. இடப்பக்கம் விழுந்ததால் தனது தோல்வி எனக் கருதி அங்கே வட்டம் போட்டுக் கொண்டிருந்தது. அப்போது அந்தப் பக்கம் வந்த காட்டுப் பசுவைப் பார்த்து பாய்ந்தது, அடித்தது. பசு வலது பக்கம் விழுந்தது. காட்டுப் பசுவை உணவாக உண்ண தனது குகைக்கு இழுத்துச் சென்றது. புலிக்குதான் எவ்வளவு மானப் பண்பு. திருடி வைத்திருக்கும் எலி போன்ற கேவலமான நண்பர்கள் வேண்டுமா? அல்லது மானமே பெரிதென நம்பி உணவை உண்ண மறுக்கும் புலி போன்ற நண்பர்கள் வேண்டுமா? இந்த கதைக் கூறுடன் அமைந்த புறநானூற்றுக் கதை தான் இது.*

***விளைபதச் சீறிடம் நோக்கி, வளைகதிர்***
***வல்சி கொண்டளை மல்க வைக்கும்***
***எலிமுயன் றனையர் ஆகி, உள்ளதம்***
***வளன்வலி யுறுக்கும் உளம்இ லாளரொடு,***
***இயைந்த கேண்மை இல்லா கியரோ?***
***புலிபசித் தன்ன மெலிவுஇல் உள்ளத்து***
***உரனுடை யாளர் கேண்மையொடு***
***இயைந்த வைகல் உளஆகி யரோ! (புறம். 190)***

**முடிவுரை**

*இவ்வாறு புறநானூற்றில் உள்ள பண்பாட்டு அடையாளங்களை முன்வைக்கும் கதைக் கூறுகள் பல்வேறு வகையான வாழ்வின் யதார்த்தங்களை நமக்கு சொல்லித் தருகின்றன. உவமைகளோடும் உருவகங்களோடும் முன்வைக்கின்ற இந்த கதைகள் புறநானூற்றில் மிக அதிகமாக இடம்பெறுவதை நாம் காணலாம்.*

**அடிக்குறிப்புகள்**

1. *புறநானூறு, பாடல் எண் - 82*
2. *புறநானூறு, பாடல் எண் - 145*
3. *புறநானூறு, பாடல் எண் - 217*
4. *புறநானூறு, பாடல் எண் - 94*
5. *புறநானூறு, பாடல் எண் - 278*
6. *புறநானூறு, பாடல் எண் - 190*

**ஆய்வுக்கு உதவிய நூல்கள்**

1. புறநானூறு தெளிவுரை - அறிஞர் ச. வே. சுப்பிரமணியன்.
2. புறநானூறு - சாலமன் பாப்பையா.
3. பன்முக நோக்கில் புறநானூறு - பேராசிரியர் மோகன்.

**References**

1. Purananooru Explanation - Scholar. Ve. Subramanian.
2. Purananooru - Solomon Pappaiah.
3. Panmuga Nokil Purananooru - Prof. Mohan.